தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1993 மார்ச் 31, புதன்கிழமை.

பங்குனி 18, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2024.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்''

கல்வி கற்காத ஒருவன் அறிவாளி என்று தன்னைத் தானே மதித்துக் கொள்ளும் மதிப்பு கற்றவர் முன் சென்று உரையாடும் போது கெட்டு விடும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண் 181, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு நிதி அமைச்சர்

181—

தேர்தலில் வாக்காளர்கட்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம்.

*11091—திருமதி ப. சரஸ்வதி :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்தலில் வாக்காளர்கட்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ரேஷன் கார்டிலேயே வாக்குரிமை பெற்றவர்கள் என்று குறிப்பிட்டு அதன் மூலம் வாக்களிப்பதற்கு அனுமதிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலில் ஒருசில தில்லுமுல்லு கட்சிக்காரர்கள் திருட்டு ஓட்டையே வெகுவாக நம்புகின்றனர். அப்படிப்பட்ட திருட்டு ஓட்டு போடுவதை தவிர்ப்பதற்கு நீதியின் தேவதை, தர்மத்தின் நாயகி நேர்மையின் சிகரம், ஒவ்வொரு குடும்பத்திற்கும், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசில் வழங்கும் குடும்ப அட்டையில் ஓட்டுரிமைப் பெற்றவர்கள் யார் யார் என்று குறித்துக் கொடுத்து, அவர்களை வாக்கு அளிப்பதற்கு செய்தால் இப்படிப்பட்ட திருட்டு ஓட்டு போடுவதைத் தவிர்ப்பதோடு போலி ரேஷன் கார்டுகளையும் தவிர்க்க முடியும். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொலை நோக்குப் பார்வையில் திட்டங்களை அளிக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில் இப்படிப்பட்ட திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதி நெருக்கடி இருந்தாலும் ஜனநாயக முறையில் வழிவகை செய்யக்கூடிய ஒரு கருத்தாக இதை எடுத்துக்கொண்டு, இந்த நடவடிக்கைகளுக்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் போன்றவற்றில் வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளை எப்படி செலுத்த வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டியது தேர்தல் ஆணையம் ஆகும். ஆனால் தேர்தல்களில் ஆள்மாறாட்டத்தைத் தவிர்க்கும் நோக்கத்தோடு இந்தியத் தேர்தல் ஆணையம் சிக்கிம், மேகாலயா, நாகாலாந்து மாநிலங்களில் வாக்கர்ளர்களுக்கு புகைப்படத்தோடு கூடிய அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை சோதனை முறையில் மேற்கொண்டு பார்த்தது. இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் பல ஏற்பட்டன என்று கண்டறியப்பட்டது. தேர்தல்கள் சாதாரணமாக ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அல்லது நீண்டகாலம் கழித்து நடைபெறுவதால் வாக்கு அளிக்கும் நோக்கோடு மட்டும் வழங்கப்படும் அடையாள அட்டைகளை வாக்காளர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதில் அக்கறை கொள்ளமாட்டார்கள். ஆகவே, வாக்காளர்களுக்கு அளிக்கப்படும் அடையாள அட்டைகள் தேர்தலுக்கு மட்டுமல்லாமல், உணவுப் பொருள்கள் வழங்கும் அட்டை பெறவும், வங்கிக்கடன் பெறவும் இதுபோன்று மேலும் பல காரியங்களுக்குப் பயன்படும் வகையில் வழங்கலாமா என்கிற ஒரு கருத்தை இந்தியத் தேர்தல் ஆணையம் இப்போது

1993 மார்ச் 31]

ஆராய்ந்து வருகிறது. பல நோக்குடைய அடையாள அட்டை வழங்க மிகுந்த செலவாகும் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், மற்றொரு பக்கம் மத்திய அரசு பல்வேறு துறைகளையும் கலந்து ஆலோசித்து, இந்தத் திட்டத்தை செம்மைப்படுத்தி, சீர்படுத்த இயலுமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியத் தேர்தல் ஆணையம் இதைப்பற்றி ஒரு முடிவு எடுத்த தற்குப் பிறகு தான், பல நோக்குடைய அடையாள அட்டையை உருவாக்கி அதிலே வாக்காளர்கள் வாக்கு அளிப்பதற்கு பயன் படுத்த இயலுமா என்பதை இந்தியத் தேர்தல் ஆணையம்தான் முடிவு செய்ய வேண்டும். இதிலே மாநில அரசைப் பொறுத்த வரையில் எந்த முடிவையும் எடுப்பதற்கு இல்லை. மத்திய அரசினுடைய, அதுவும் தேர்தல் ஆணையத்தினுடைய ஆணை யைத் தான் நாம் நிறைவேற்ற வேண்டி வரும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை தேர்தல் ஆணையம் செய்யுமேயானால், அப் போது தமிழக அரசு அந்த முறையைப்பின்பற்றி நடைமுறைப் படுத்துவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்யும்.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் நவீன விஞ்ஞான உலகில் முன் னேற்றப் பாதையில் தமிழகத்தை அழைத்து செல்லக்கூடிய திராவிட இயக்கத்தின் தவப்புதல்வி சதிகார கும்பலை தம் மதிநுட்பத்தால் வெல்லும் சர்வவல்லமை படைத்த டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் கம்ப்யூட்டர் முறை யில் ஓட்டுப் போடும் திட்டத்தை அமல்படுத்த இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு தமிழக அரசு பரிந்துரை செய்து, இப்படிப்பட்ட தில்லுமுல்லுகளை அடக்குவதற்கு, எல்லாம் வல்ல எங்களுடைய புரட்சித்தலைவி அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி, இந்திய தேர்தல் ஆணையம் அதைச் சீர்படுத்த, செம்மைப் படுத்துவதற்கான முறைகளை ஆராய்ந்து கொண்டு இருக் கிறது என்று நான் குறிப்பிட்டேன். அவர்கள் சில பல யோசனை களை மாநில அரசுகளிடம் கேட்பார்கள் என்ற நிலை ஏற்படுமானால், அப்போது கூடிக் கலந்து முடிவு எடுக்கின்ற போது, சிலபல நல்ல யோசனைகளையும் சொல்லலாம். ஆனால் அது எந்த வகையிலே இந்திய தேர்தல் ஆணையம் என்ன முடிவு செய்கிறது, எந்த முடிவை எடுத்திருக்கிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. அந்த முடிவு வந்ததற்குப் பிறகுதான் நமது மாநில அரசின் சார்பாக ஏதேனும் கருத்தை நாம் சொல்ல இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 182, திரு. ஏ. எம். பரமசிவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

182—

வாடிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்குதல்.

*9071—திரு. ஏ. எம். பரமசிவன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாக நிலை உயர்த்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 30—3—1992 முதல் அரசு வட்ட மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

திரு. ஏ.எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்தியதற்கு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாடிப்பட்டி தாலுக்கா மருத்துவமனையாக இருப்பதால், அங்கே அறுவைச் சிகிச்சை அரங்கு ஏற்படுத்தப்படுமா ? மேலும் அங்கே சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தது, இப்போது தாலுக்கா மருத்துவமனையாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அங்கே தேவையான வசதிகளை படிப்படியாகத்தான் செய்யவேண்டியிருக்கும். ஸ்பெசலிஸ்டுகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மருத்துவமனையிலும் என்னென்ன ஸ்பெசலிஸ்டுகள் இருக்கவேண்டும் என்று ஒரு நடைமுறையை செயல்படுத்துவதற்காக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. எல்லா இடத்திலேயும் ஒரேமாதிரியான ஸ்பெசலிஸ்டுகள் இருக்கவேண்டும் என்ற நிலையை எடுத்திருக்கிறது. எனவே,